**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் கிரயம் ரூபா 21,260,122 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக ஏற்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை மதிப்பீடு செய்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், உரிய சீராக்கங்கள் 2023 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய சொத்துக்கள் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் 11 நிறுவனங்களால் மொழி பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தி பட்டியல் சமர்ப்பிக்கும் போது செலுத்த வேண்டிய ரூபா 37,395,922 தொகைக்காக நிதிக் கூற்றுக்களில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதற்காக திறைசேரியின் பணம் கிடைக்காதிருந்ததுடன், உரிய நிறுவனங்களில் அதுவரையில் உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல்கள் கிடைக்காமையினால் செலுத்து வேண்டிய மீதியாக கணக்குகளில் | செலுத்த வேண்டிய மீதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உள்ளடக்கப்படவில்லை. இந்த சம்பவங்கள் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களில் முக்கியமாக இருந்தமையால் கணக்கீட்டு குறிப்பின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமுதாய முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 2,290,285 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் கிடைக்க வேண்டிய மீதியான நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கலைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமுதாய முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சிலிருந்து பெறவேண்டிய மீதி தொடர்பாக முன்னாள் இருந்த அமைச்சுக்கு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக தற்போது நிறுவனத்திற்குரிய வரிசை அமைச்சிற்கும் இது தொடர்பான தகவல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது. | பெறவேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வானொலி நிகழ்ச்சித் திட்டத்திற்காக இலங்கை வானொலி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,500,676 மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஆஸக் மீடியா (தனியார்) கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 458,820 தொகை என்பன 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் செலுத்த வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட மூலதன நிதி ஏற்பாடுகளுக்கு உரிய பணம் திறைசேரியில் இருந்து விடுவிக்காமையின் அடிப்படையில் இந்த மீதி தொடர்ச்சியாக செலுத்த மீதியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) நிதிஏற்பாடு கிடைக்காமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வள பங்களிப்பாளர்களுக்கு செலுத்த வேண்டி காணப்பட்ட ரூபா 2,449,985 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதிஏற்பாடு ஒதுக்கி செலவினங்கள் செய்யப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலின் 03 ஆவது அத்தியாயத்தின் 3.2(v) ஆம் பந்தி | அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில்முயற்சிகளில் படிகளை செலுத்தும் போது ஊக்குவிப்பு முன்மொழிவுத் திட்டம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் அங்கீகரிக்க வேண்டிய போதிலும், அந்த ஆலோசனைகளுக்கு இணங்காமல் மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 675,000 ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது. | 140.08 என்ற முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | அரசாங்கத்தின் நிறுவனம் மூலம் கட்டிடம் வாடகைக்கு எடுத்தல் நிறுத்த வேண்டியிருந்த போதிலும், நிறுவனம் நடாத்திச் செல்லப்படுகின்ற வாடகை கட்டிடத்திற்காக 2023 பெப்ரவரி 13 ஆம் திகதி வரை ரூபா 1,350,000 மாதாந்த வாடகையில் உடன்படிக்கை செய்யப்பட்டு தற்போது வரையில் அந்த கட்டிடத்தில் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக இடமொன்றை கண்டறிய முடியாமையினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற கட்டிடத்தின் உடன்படிக்கை காலத்தை நீடிப்பதற்காக முகாமைத்துவ சபையின் பரிந்துரையின் அடிப்படையில் அமைச்சரவை பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 47,590,386 மிகையான இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 13,849,436 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 61,439,822 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் பயிற்சி பாடநெறி வருமானம் ரூபா 80,864,525 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பயிற்சி பாடநெறியை நடாத்துவதற்கு அரசகரும மொழிகள் விடயப் பொறுப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இந்த நிறுவனம் மற்றும் அரசகரும மொழிகள் திணைக்களம் காணப்படும் போது முகாமைத்துவ தீர்மானத்தின் அடிப்படையில் உத்தியோகபூர்வ மொழிகள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனத்தால் 89 பாடநெறிகளும், ஏ.ஐ.எம்.எஸ். கல்வி சேவை தனியார் கம்பனியினால் 03 பாடநெறிகளும் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்தன. | 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தின் (இ) இன் பிரகாரம் நிறுவனத்தின் முழுமையான மேற்பார்வையின் கீழ் இந்த நிறுவனத்தின் மூலம் உரிய பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கு சொந்தமான வளங்களை பயன்படுத்தி பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |